# இரத்தின தீபம்

அமரர் கந்தையா இரத்தினம் நினைவாக



16. 09. 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
"உதயன்" பத்திரிகையின்
புகைப்படக் கலைஞரும்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்
யாழ். சுண்டிக்குழியை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய

# கந்தையா இரத்தினம்

அவர்களின்

அந்தியேட்டி
**நினைவு மலர்**

# இரத்தின தீபம்

16.09.2016

கவிதையாக்கம்

சுண்டிக்குழியூர்


கவிஞர் கலாபூஷணம் கூத்தாடி வி. சி. குஞ்சிதபாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிஜங்களை எல்லாம் நிழலாக்கி
புஜங்களை கொண்டு – நல் பொக்கிசம்
தந்த புகழ் ஒளியே !
எம்முன் நிஜமான நிழலே !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பம்

நல்லைநகர் நா யகனே!
    நலமீயும் வித் தகனே!
எல்லை கடந் தெமக்கு
    ஏற்ற மளிப் பவனே!
தொல்லை துணித் திட்ட
    தூயவனாம் இரத்தி னத்தை
வல்லவனா யுன் கழலில்
    வளமீந்து வைத் திடையா!

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## அமரர்

# கந்தையா இரத்தினம்

மண்ணில் : 24. 01. 1947
விண்ணில்: 03. 08. 2016

**திதி நிர்ணய வெண்பா**

ஆடிப்பிரதமை பூர்வபக்க ஆமிலியம்
தேடித் திருப்பாதம் சென்றடைந்தார் – கூடுவிட்டு
வீசுபுகழ் இரத்தினனார் விசும்பிடையே விரைந்திட்டார்
தேசுபிறை திருவழகன் தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1985 இல் அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாமானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் மானாய் நீயே
திருவையாறகலாத செம் பொற் சோதி

## திருவாசகம்

குறைவில்லா நிறைவே சோதில்லா அமுதே
ஆறிலாக் ருகாழுஞ்சுடர்க்குன்றே
மாயையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெறா நீர்போல் சிந்தை வாய்ப் பாயும்
திருப்பெருந்துறையுறை சிவனே
இறைவனே நீ என் உடலிடங் கொண்டாய்
இனியன்னை என்னிரக் கேனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத் மனத்தினை நைவிப்பாய் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
ஐயாத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
காரார் தொல் புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகிறாள்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறபுண்டேல் - உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

துள்ளுமத வேட்டை கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெல்ல வரு சோலைக் குயிலாலே
மெய்யுருக மானைத் தழுவாதே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திரண்ளோனே
வள்ளல் தொழு ஞான கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே

## அம்பாள் துதி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

## காயத்திரி மந்திரம்

ஓம்
பூர் புவஸ் ஸ்வக
தத் ஸவிர்துர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
திய் யோ யோந ப்ரசோதயாத்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### காலஞ்சென்ற புகைப்படக் கலைஞர்
## திரு. கந்தையா இரத்தினம் அவர்களின்
## வாழ்க்கை வரலாறு

ஆழிசூ ழிலங்கை அமைவுறு வடபால்
மேழிசே ரிலங்கும் சாவகச் சேரியில்
தலையென மிளிரும் தனித்துவ நகரில்
கலைபல கொழிக்கும் கவினுறு குடியில்
கந்தையாவுடன் மீனாட்சி யம்மையும்
சிந்தை சிறந்திட இயற்றிய தவத்தால்
இரத்தினம் எனும்பே ரினியவன் தோன்றினன்
இரத்தினத்தின் இணை யிலாத் தங்கையாய்
மங்கையர்க்கரசியார் மா தவத் துதித்தனள்
குடும்பச் சிறப்பைக் குவலயம் தன்னில்
இடுக்க ணின்றியே இயற்றிய இரத்தினம்
கமலா தேவியின் கரந்தனைப் பற்றிட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமேசெனும் இளவலைக் குழந்தையாய்க் கொண்டனன்
தவநிறைப் புதல்வனாய் தரணியில் உயர்ந்தவன்
கஜமுகன் ஹாட்வெயர் நிறுவனம் தன்னில்
விற்பனை முகவராய் முது நிலை பெற்றனன்.
கல்வியி லோங்கிய கந்தையா இரத்தினம்
ஒளிப்படத் துறையில் ஓங்கி உயர்ந்தனன்.
வடமாகாண வளர் பிறை யாகவே
திடமுட னுயர்ந்த ஞானம்ஸ் ஸ்ரூடியோ
அன்புடனீந்த அரும்பெரும் வாய்ப்பால்
இன்பமாய் வாழும் இதந்தனைப் பெற்றனன்.
சந்திரா வெனும் சால்புகொள் மங்கையை
சிந்தனை சிறந்தநல் மருகியா யேற்றனன்.
அன்னவர் ஆற்றிய அரும்பெரும் தவத்தால்
கிசோவர்மா, சபிசனா ஆகிய இருவரும்
பேரர்கள் வரிசையில் பெரும்பே றீந்தனர்.
மகிழ்ச்சியின் எல்லையின் மகத்துவம் காண
தளர்ச்சி யின்றியே தனித்துவம் பேணினன்.
அன்பினா லாண்ட இரத்தின வள்ளலார்
உயர்நிலை பேணும் "உதயன்" நாழிதளில்
படப்பிடிப் பாளராய் பாங்குடன் சேவையை
திடமுட னாற்றிய கடமையின் திண்மை
மடமையை யொழித்த நல் வாய்மையின் வண்மை.
அன்பினா லாண்ட இரத்தின வள்ளலார்
துன்பியல் தம்மைத் துணையென விடுத்து
என்பது உருகிட எமையழ வைத்து
மன்னவன்மலரடி மகிழ்ந்துறைந் தனனே!



ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைகழ லேகினையே!

### மனைவி, மகன், பெறாமகன்

அப்பா! அப்பா! வெனவே
அன்புக் குல முறையால்
இப்பார் மடி தனிலே
இனியாரை நா மழைப்போம்?
அப்பா வுன் கண்மணிகள்
அலறித் துவள் கையிலே
இப்பார் தனை விடுத்து
இறைகழ லேகினையே!

## வெந்திட ஏன் பிரிந்தாய்?

### தங்கை

மாதவம் செய்து பெற்றேன்
மதிமிகு உடன் பிறப்பாய்
கோதிலாக் கொள்கை தன்னால்
குவலயம் தனிலே யென்னை
தீதிலா வழியிற் செல்ல
திசைதனைத் தெருட்டி நாளும்
வேதனை தனிலே நானும்
வெந்திட ஏன் பிரிந்தாய்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்செனவே பறந்ததென்னே!

### பேரப்பிள்ளைகள்

கொஞ்சுமொழி பேசிக் குலவித் திரிகையிலே
நெஞ்சு குளிருதென நெக்குருகி நீ மகிழ்ந்தாய்
அஞ்சுகமே எனஎம்மை அள்ளி அணைத்திடுவாய்
ஆரமுதே எனவமுதம் அருகிருந்து ஊட்டிடுவா
பிஞ்சுமனதுக்குப் பிடித்த கதை களெல்லாம்
விஞ்சு மழலையிலே விரைவாகச் சொல்லிடுவா
தஞ்சமே நீ என்று தாரணியில் நாமிருக்க
பஞ்செனவே பறந்ததெனனே! பரிவுடனே சொல்லாயே

## பரவி நிறையுதம்மா!

### பெறாமக்கள்

பெரியப்பா என் றழைத்து (ப்)
பேரன்பு காட்டி நின்றோம்
வித்தாரச் சொல் லதனில்
விசையாகக் கட் டுண்டோம்
சித்திரமாய் மாறி விட்ட
நித்திலமே நின் நினைவு
பத்திரமாய் எம் மனதில்
பரவி நிறையு தப்பா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சென்றிட்டாய் சித்தமெல்லாம் கலங்குதையா!**

*மருமக்கள்*

பாலுடனே தேன்கலந்த வாறு போல
பைந்தமிழில் மாமாவெனப் பகரும் நாளில்
ஞாலமதில் நாம் சிறப்பாய் வாழ்வதற்கு
நல்லையருள் வேண்டி நிதம் நீ தொழுதாய்!
கோலமுடன் கொள்கைதமைப் பற்றி யாங்கே
குலவுகையில் குணச்சிறப்பு ஒளிரக் கண்டோம்
சீலமெலாம் சித்திபெறச் சிவனை நாடி (ச்)
சென்றிட்டாய் சித்தமெலாம் கலங்குதையா!

**பிதற்றுகிறோம் நாமிங்கே!**

*மைத்துனர்கள் மைத்துனிகள்*

மைத்துனரே! என்று நிதம்
மனதார நா மழைக்க
சத்தான வார்த்தை களால்
முத்தாக நீ யுதிர்வாய்!
சத்தியமே உந்த னுயிர்
சரித்திரமே யுன் வாழ்வு
பித்தனடி சேர்ந்து விட்டாய்
பிதற்றுகிறோம் நா மிங்கே!



## பெருமனதுக் கீடுண்டோ !

உற்றார் உறவினர்

அன்பொழுகப்பே சிடுவாய்
அமுதநிலை பேணிடு வாய்
துன்பச் சுமைக ளெலாம்
தூர விலக் கிடுவாய்
இன்னல் தமைக் களைந்து
ஈர்ந்திடுவா யெம் மிதயம்
பின்னிப் படர்ந்த வுந்தன்
பெருமனதுக் கீடுண்டோ?

## சிந்தையிலே என்றென்றும் நிலைக்குமையா !

அன்புடையோர்

பந்தமுடன் பாசமெலாம் பாகா யோட (ப்)
பார்தனிலே பாங்குடனே வாழ்ந்த கோவே!
சந்ததமும் உனதுஎழில் வதன மீந்த
சாந்தநிலை எமதுமனச் சிறை யிலாட
அந்தரத்தில் எமையுலகி லுழல விட்டு
ஆண்டவனின் அருளொழுகு திருத்தா ளேற்ற
சுந்தரனே! இரத்தினமே! உந்த னாட்சி
சிந்தையிலே என்றென்றும் நிலைக் குமையா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடலுயிர் சாம்புதையோ !

நண்பர்கள்

உள்ளமும் உயிரும் கூம்ப
உரைத்திடும் வகையே தின்றி
கள்ளமாய்க் கடுகிச் சென்றாய்
கலங்குமெம் முள்ளம் தம்மை
வள்ளலாய் நீ மிளிர்ந்து
வழங்கிய வணப்பை யெல்லாம்
உள்ளத்தே நாளு மெண்ணி
உடலுயிர் சாம்பு தையோ!

## விமலனே விளம்புவாயே!

நண்பர்கள்

தண்மதி அனைய செம்மை
தமிழுதிர் சொல்லின் வண்மை
கண்ணெதிர் தோன்றா நின்ற
கனந்தவுன் னிதயத் திண்மை
மண்ணவர் மதிக்க வாழ்ந்த
மதி நலம் மறுகி வீழ
விண்ணிடை யேன் விரைந்தாய்?
விமலனே! விளம்புவாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்ப்பதும் ஏகினாயே!

நண்பர்கள்

உலகினைப் படைத்துக் காத்து
உவந்ததை யழிக்கு மாசான்
பலபடப் பரந்த ஜோதி
பனிமதிச் சடையன் பாதம்
நலம்பெற நாளு மேத்தி
நாயதாய் மாறி, நெஞ்ச
மலமதை யறவே நீக்கி
மலர்ப் பதம் ஏகி னாயே!

## தேற்றம்

## குலைந்திடல் திண்ணமன்றோ ?

பாட்டுடைத் தலைவன், தில்லை
பதம் பிடித் தாடுங் கூத்து
காட்டிடும் தொழில்க ளைந்தும்
கருணையின் வடிவே யாகும்
நாட்டிய அரங்கி லேறும்
நடிகரின் இயல்பே போல (க்)
கூட்டினை விட்டே யாவி
குலைந்திடல் திண்ணமன்றோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொல்லையிரும் பிறவிச் சூழும்தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலால் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்மாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயக வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தம் கருத்திக்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளிய
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

முற்றும்



## அன்பும் அருளும்

மக்களை மக்களாக வாழ்விப்பது அன்பும் அருளுமேயாம். நாசசக்திகள் தலைகாட்டாத வண்ணம் தடைசெய்து இன்பத்தை வழங்கு வது அன்பும் அருளுமேயாம். மக்களை நன்னெறியில் அழைத்துச் செல்வது அன்பும் அருளுமேயாம். இவ்விரு அருமைமிகு உணர்ச்சி களை மக்கள் இழப்பராயின் நரகத்தின் நிரந்தர உரிமையாளர்களாகி விடுகின்றார்கள். "அருளும்.அன்பும் நீக்கி நீங்காநிரயம் கொள்பவர்" என்று புறநானூறு பேசுகின்றது. அத்தகையாரோடு இணங்கற்க என்று ஆணையிடுகின்றது. தேவையை நிறைவு செய்துகொள்வதற்காகக் கூட இப் பண்புணர்ச்சிகளைக் கைவிடலாகாது. அங்ஙனம் கைவிடுபவர்கள் அறிவுடையவர்களல்லர் என்று தமிழ் மகள் கூறுகின்றாள். தலைவன் பொருள்வயிற் பரியப் போகின்றான் என்றசெய்தியைக் கேட்ட தலைவி. தோழியிடம் அறம் பேசுகின்றாள். அருளையும் அன்பையும் துறந்து பொருளீட்டுதல் தமிழ்ப் பண்பாடல்ல. அறிவுடைமையுமல்ல .

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"

என்பது தமிழ்மறை. "இதனை அறிந்தும் தலைவர் பொருள் வாயின் அகலுவாராயின். அவர் அறிவுடையவரே ஆகுக." என்று இகழ்ச்சிக் குறிப்பில் பேசுகின்றாள் தலைமகள்.

"அருளுமன்பு நீக்கித் துணை துறந்து
பொருளவயிற் பிரிவோ ருரவோ ராயின்
உரவோ ருரவோ ராக"

என்பது பாடல். அருளும் அன்பும் தவழ்ந்த வாழ்க்கையே வாழ்க்கை என்று பேசும் தமிழ் நாகரிகத்தை என்னென்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தொடரபு நிறைந்த வாழ்க்கையில் எங்கும் அன்பைக் கண்டு, அன்பைச் செலுத்துவது அருள். தொடர்புடையார் மாட்டு எழும் பரிவுணர்ச்சி அன்பு. ஆனால், கடவுட் காட்சியில் கலந்த வாழ்க்கையில் வேறொரு துறையாக அமைந்து விளக்கம் நல்குகிறது. அங்கு முழு முதற் பொருள் உயிர்கள் மாட்டுக் காட்டும் பரிவுணர்ச்சி அருள். அவ் வருளைப் பெறுவதற்காக ஆண்டவன் பால் உயிர்கள் கொள்ளும் பரிவே அன்பு. அவ் அன்பும் அருளும் கலக்கின்ற பொழுது அறம் தோன்றுகிறது.
இதனை,

"யாஅ மிரப்பவை பொருளும் பொன்னும் போகமும்
அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர் கடம்பின் ஒலிதாரோயே"

என்று பரிபாடல் விளக்குகிறது. **"உன்தன் வார் கழற்கு அன்பு எனக்கு நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்தமுழுவதுமே"** என்பது மணிவாசகர் மணிமொழி. அருளின்றி அன்பில்லை. அன்பின்றி அருளில்லை. இவ் விரண்டுமின்றி அறம் இல்லை. எனவே, அருளும் அன்பும் கொண்டு அறம் பலசெய்துவாழமுயல்வோமாக!

*பணம் சம்பாதிப்பது வாழ்வில் முக்கியம்தான்.*
*எப்படிச் செலவு செய்வது என்பது அதைவிட முக்கியமானது.*
*தவறான செலவு எனினும் தப்பான சம்பாதிப்பு எனினும்*
*சம்பாதிக்காமல் இருப்பது மேல்.*
*காசு நம்மை ஆளக்கூடாது. காசை நாம் ஆளவேண்டும்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிவேன்


"நான் அறிவேன்" என்றவுடன் பயப்படுகிறீர்களா? "காட்டிக் கொடுத்து விடுவேனோ" என்று கவலைப்படுகிறீர்களா? அப்படியெல்லாம் ஒன்றும் நேரிடாது. பயப்படாதீர்கள். தைரியமாகக் கட்டுரையைப் படியுங்கள்.

"போதாமை என்ற மனப் பண்பு பெரும்பாலான மக்களிடையே பரவியுள்ளது. "போதும் என்ற பண்பு ஒரு சிலரிடத்தில்தான் உள்ளது. "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பது ஏட்டளவில்தான். செயலில் இல்லை. அதனாலன்றோ எமர்சன். "போதுமென்ற மனத்தை எவ்வாறு அடைவது என்று காட்டுவதும், எவ்வாறு இன்னும் பெருக்கிக் கொள்வது என்ற எண்ணத்தினை அழிப்பதுமே தூய பெருநெறி" என்றார்.

"வேண்டாமை என்னும் செருக்கு" என்றார் திருவள்ளுவர். "ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்" என்றார் திருமூலர். "போதும் என்று திருப்தியடைந்த பூரண மனந்தான் பூரண ஐசுவரியமாகும்" நபிகள் நாயகம். "போதும் என்ற மனோபாவத்துடன் பறவைகளைப் போல வாழ வேண்டும்" என்றார் மகாத்மா. ஆகவே, "போதாமை" என்ற மனோநிலை எல்லோராலும் வெறுக்கப்படுகின்றது. "இன்னும் வேண்டும்" என்ற இப் பிணிக்கு மருந்து நீதியும் நடுவுநிலைமையும் ஆகும்.

"போதாது" என்று சொல்கின்றவர்களில் சிலர் இயற்கையாகவே தேவையுள்ள நிலையில் இருப்பார்கள். அவர்கள் கடமைகளைச் செய்தும் பெறவேண்டியவற்றைப் பெறாது வருந்துவார்கள். "உழைத்ததின் பயனைக் காணோமே" என்று கவலைப்படுவார்கள். அவர்கள் நிலை இரங்கத்தக்கதொன்றாகும்.

பெரும்பாலானோர் கடமையைச் செய்யமாட்டார்கள். செய்ய வேண்டியவற்றைச் செய்யமாட்டார்கள். கடமையைச் செய்யாமலே உரிமையைப் பெற முயல்வார்கள். கடமை என்பதொன்று உண்டு என்பதையே மறந்து விடுவார்கள். அத்தகையருள் ஒருவர்தான். "நான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அறிவேன்" என்றார். "பெற வேண்டியவற்றின் பாக்கியை நான் அறிவேன்" என்று கூறுகிறார். அவரது ஆசை தீராத ஆசையாக இருக்கின்றது.

அன்பரின் ஆசை வெறுக்கத்தக்கது அல்ல. தீயது அல்ல. போற்றத்தக்கது. புகழத்தக்கது. அன்பரின் "இன்னும் வேண்டும்" என்ற ஆசை பொன்னைப் பற்றியது அல்ல. பொரளைப் பற்றியது அல்ல. பேராவியற்கையைப் பற்றியது. இன்பத்துள் இன்பத்தைப் பற்றியது. அறவாழி அந்தணன் தாள் சேர்தலைப் பற்றியது. அன்பரின் விருப்பம் சற்றே நிறைவேறியது. ஆண்டவனைக் கண்டார். கண் குளிரக் கண்டார். மாலமுதப் பெருங்கடலை மண்ணிலே கண்டார். துன்பம் துடைக்கும் தூய சோதியைக் கண்டார். நெஞ்சத்தைக் கோவிலாகக் கொண்ட நிமலனைக் கண்டார். அகம் நெகக் கண்டார். அன்புருகக் கண்டார். இன்பப் பெரு வெள்ளத்தில் ஆழ்ந்தார். ஆனாலும், எல்லாம் சிறிது காலம் . கண்ணால் கண்ட திரு உரு மறைத்தது. கண்ணால் கண்ட இறைவன் மறைந்நான். அன்பரைத் தனியே விட்டுச் சென்றான். இன்பத்தின் அனுபவம் இடையறவுபட்டது. பிரிவினால் வருந்துகின்றார் அன்பர். புலம்புகின்றார். பிரிவுத் துன்பம் கொடிய துன்பமல்லவா? "இனியார்ப் பிரிவு இன்னாது" என்பது பொய்யாமொழியல்லவா? பிரிவாற்றாமையால் திண்வரை உருளவும், தீயில் வீழ்கவும், செழுங்கடல் புகவும் எண்ணுகின்றார்.

"உன்றான் வார்கழற்கு அன்பெனக்கு
நிரந்தரமாய் அருளாய்"

என்று இரந்து வேண்டுகின்றார்.

தினையின் பாகமும் பிரியாமலிருக்க வேண்டுகிறார். இந்த உரிமையைக் கேட்கின்ற பொழுது அன்பர் தனது நிலையைச் சிந்தித்துப் பார்க்கின்றார். நீதியுணர்ச்சியோடு, நடுவு நிலைமை உள்ளத்தோடு சிந்தித்துப் பார்க்கின்றார். அறனறிந்து ஆன்றமைந்த அமைச்சரல்லவா? சிந்தனையின் முடிவில் அவர் தம்மை உணர்ந்தார். தம் குறையை உணர்ந்தார். தமது குறையை,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்மலரிட்டு முட்டா நிறைஞ்சேன்"

"ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன். அன்புருகேன்"

"விரையார்ந்த மலர்தூவேன்: வியத்தலரேன் நயந்துருகேன!"

என்று சொல்லுகின்றார். இருப்பினும் திருவடி இன்பத்தைப் பெற விரும்புகின்றேன். கடமையைச் செய்யாது உரிமையைப் பெற விரும்புகின்றேன். எனனே அதிசயம்! என்று சிந்திக்கின்றார் அன்பர்.

"எச்சம் அறிவேன் நான் எனக்கு இருக்கின்றதை அறியேன்" என்பது மணிவாசகர் வாக்கு.

கடவுள் உண்டா? கடவுள் என்று ஒன்று இருந்தால் ஒருவர் துன்பத்தையும் மற்றவர் இன்பத்தையும் அனுபவிப்பானேன்? எத்துணையோ கோயில்களில் பூசைகள் நடந்தும் நாட்டைப் பஞ்சம் நலிப்பானேன்? என்றெல்லாம் கேட்கின்ற அன்பர்களுக்கு அடிகளின் சிந்தனை பதில் கூறுகின்றது.

**கடுமையாக உழைத்து நேர்மையாக வாழ்ந்தால்**
**தொடர்வதற்குப் பலர் இருப்பார்கள்.**

*பொய் பேசாதே!*

*உண்மை கூறு!*

*எவர்க்கும் அஞ்சாதே!*

*வாழ்வில் நம்பிக்கைகொள்!*

*வாழ்ந்துகாட்டு!*

*உன்னைநம்பு!*

*உற்சாகம் கொள்!*

*உலகம் உன்னைத் தொடரும்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சிந்தனை - சுவாமி விவேகானந்தர்

### தன்னம்பிக்கை

- தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும்.

- உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம். உன்னை விட உயர்ந்தவர் யாருமில்லை. பிரம்மமே நீ என்பதை அனுபவம் மூலம் தெரிந்துகொள்.

- முன்வினை, அது இது என்பதையெல்லாம் தூக்கி வீசியெறி. முற்பிறவியின் வினைப் பயனால் இப்போது நீ இந்தப் பிறவியை எடுத்திருப்பது உண்மையானால், நல்ல செயல்களைச் செய்வதன் மூலம் முற் பிறவியின் தீய பலன்களை அழித்து, இந்தப் பிறவியிலேயே நீ ஏன் ஜீவன்முக்தனாகக் கூடாது? விடுதலை அல்லது ஆத்மஞானம் உன் கைகளிலேயே இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்.

- உன்னிடம் அளவற்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள். பிறகு அந்த நம்பிக்கையை நாட்டிற்கு வழங்கு.

- நானும் நீங்களும் நாம் ஒவ்வொருவரும் ரிஷியாவோம் என்ற தன்னம்பிக்கை நமக்கு ஏற்பட வேண்டும். நமக்குள் எல்லா ஆற்றலும் இருப்பதால் நம்மால் உலகத்தையே இயக்க முடியும்.



- இளைஞர்களே! எனது நம்பிக்கை எல்லாம் உங்களிடம் தான் இருக்கின்றது. நமது தாய்த் திரு நாட்டின் அறைகூவலுக்குச் செவிசாய்ப்பீர்களா? உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்குமானால் என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்து நிற்கின்றது என்பேன். எதற்கும் கலங்காத நம்பிக்கை, எதற்கும் தளராத தன்னம்பிக்கை வேண்டும். சிறுவனாக இருந்தபோது எனக்கு என்னிடம் அத்தகைய தன்னம்பிக்கை இருந்தது. உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்களிடத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். அளப்பரிய ஆற்றல் உங்கள ஒவ்வொருவருடைய ஆன்மாவிலும் அடங்கிக் கிடக்கின்றது என்பதில், உங்கள் முயற்சியால் இந்தியா மறுமலர்ச்சி பெறும், புதிய இந்தியா உருவாகிவிடும் என்பதில் உங்களுக்கு அசையாத நம்பிக்கை எழ வேண்டும்.

## ஒழுக்கம்

- உலகிலுள்ள மதங்கள் எல்லாம் உயிரற்ற வெறும் கேலிக் கூத்தாக இருக்கின்றன. இப்பொழுது உலகத்திற்கு தேவைப்படுவது ஒழுக்கம் தான். தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகின்றனர். இத்தகைய அன்புடையவர் சொல்கின்ற ஒவ்வொரு சொல்லும் இடியோசை போல எங்கும் முழங்கம்.

- சுயநலமே ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இது தான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக் கூடிய ஒரே இலக்கணமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு மனிதன் குற்றம் குறைகளுடன் தாழ்வுற்று இருப்பதற்குக் காரணம், அவன் உயர்ந்த இலட்சியங்களை அறியாததுதான். அவன் தவறுகள் செய்வதற்கு காரணமும் அதுவே தான். நல்லவற்றை அவனுக்குப் போதியுங்கள். அவன் திருந்தி நல்லவன் ஆகிவிடுவான்.

- துரதிஷ்ட வசமாக இந்த வாழ்க்கையில் மக்களில் பெரும் பாலானவர்கள் எந்த விதமான ஓர் உயர்ந்த இலட்சியமும் இல்லாமல், இருளடைந்த இந்த வாழ்க்கையில் தட்டுத் தடுமாறிச சென்றுகொண்டிருக்கின்றனர். ஊயர்ந்த இலட்சிய முள்ள ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சியம் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். எனவே, உயர்ந்த ஓர் இலடசியத்தைக் கொண்டிருப்பது மேலானது.

- சிந்தனையின் தொண்ணூறு சதவிகித ஆற்றல் சாதாரண மனிதனால் வீணாக்கப்டுகிறது. எனவே, தொடர்ந்து அவன் பெரிய தவறுகளைச் செய்து கொண்டே இருக்கின்றான். சுரியான பயிற்சியைப் பெற்ற மனிதனோ மனமோ ஒரு போதும் தவறு செய்வதில்லை.

- நமது பிரார்த்தனையில் இறைவனை நாம் நம் அனைவருக்கும் தந்தையாக ஒப்புக்கொண்டு, நமது தினசரி வாழ்வில் ஒவ்வொரு மனிதனையும் நமது சகோதரனாக நடத்தாமல் போனால், அதனால் என்ன நன்மை ஏற்படும்?

- பிறரது குறைகளைப் பற்றி ஒரு போதும் பேசாதே. ஆவை எவ்வளவு கெட்டவையானாலும் சரி. அதனால் எந்தப் பயனும் என்றும் விளைவதில்லை. ஒருவனுடைய குற்றங்களைப் பற்றிப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பேசுவதனால் அவனுக்கு ஒரு நாளும் நீ உதவி செய்தவனாகமாட்டாய். மாறாக அவனுக்கும் கேடு செய்து, உனக்கும் கேடு இளைத்துக் கொள்கின்றாய்.

- கீழ்த்தரமான தந்திரங்களாலும் இந்த உலகில் மகத்தான காரியம் எதனையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.

- ஆசாரம் என்ற சொல் அகத் தூய்மையையும் குறிக்கும். புறத் தூய்மையையும் குறிக்கும். புறத்தூய்மையை நீராலும், சாஸ்திரங்கள் கூறும் முறைப்படி நடப்பதனாலும் பெற முடியும். பொய் சொல்லாமை, பிறருக்கு நன்மை செய்தல் ஆகிய வற்றால் அகத் தூய்மை ஏற்படும்.

- உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

- தாய் நாடு, மக்கள் சமுதாயம், சத்தியம் இவற்றை உண்மை யாகவே நேசித்து எவன் பணிவுடன் நடக்கிறானோ, அவனால் உலகத்தையே ஓர் அசைப்பு அசைத்துவிட முடியும். ஆற்றல்களுக்கெல்லாம் அடிப்படையாய் இருப்பது ஒழுக்கமே யன்றி வேறு எதுவுமன்று.

- எல்லாரிடத்திலும் சம அன்பு கொள்ளுதல் மிகக் கடுமையான ஓர் ஒழுக்கமாகும். இந்த ஒழுக்கமின்றி முக்தி கிட்டாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எந்தக் காலத்திலும் தைரியத்தை இழக்காதே. சாப்பிடும் போதும் உடுத்தும் போதும் படுக்கும் போதும் பாடும் போதும் விளையாடும் போதும், மகிழ்ச்சியிலும், நோயிலும் எப்போதும் மிகவும் உயர்ந்த ஒழுக்கத்துடன் கூடிய தைரியத்தை உன்னிடமிருந்து வெளிப்படுத்து. அதன் பிறகுதான் மகா சக்தியான ஜகன்மாதாவின் கருணையைப் பெறுவாய்.

- உங்களுக்கு வேண்டியதெல்லாம் ஒழுக்கமும் ஆண்மையும் தான். கோழைத்தனமின்மை, பாவமின்மை, பலவீனமின்மை இவையே தேவை. மற்றவை தாமாகவே உங்களைத் தேடி வரும். ஊளத்தைத் தூண்டக் கூடிய, உணர்ச்சியை எழுப்பக்கூடிய கேளிக்கை, களியாட்டங்களுக்குச் செல்ல வேண்டாம். நாடக மேடைகளை நாட வேண்டாம்.

தவறு செய்வது இயல்பு.

தவறு செய்யா தமனிதர்களே இல்லை.

ஆனால் அது உன்னைத் தின்னும் வரை கிடந்து உழலாதே.

எழு!

வீரியத்துடன் எழு!

Arise! யோசி.

எங்கே தவறினாய் என்று.

பின்னர் தொடர்ந்து நட!

இல்லாவிட்டால் உலகம் உன்னைப் பின்னேதள்ளிவிடும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாசமிகு குடும்பத்துடன் அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர், பாரியார் மற்றும் பெறாமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 . 01 . 1948 | | 03 . 08 . 2016 |



அமரர் **கந்தையா ரட்ணம்**
**(மகாலிங்கம்)**

மீசாலையை பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குழி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா ரட்ணம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இதயத்தின் நூறலில் உயிர்ப்பிழந்து போனது**
**நேற்றிருந்த உறவு ஒன்று இன்று மடிந்து போனது**
**காத்திருந்த உறவு கண் விழித்துப் பார்த்திருக்க**
**பார்த்திருந்த மரணம் பரிதவிக்கச் செய்தது**
**பேச்சிழந்து புலம்புகின்றோம்–புலம்பியொரு**
**வார்த்தை உன்னிடத்துத் தேடுகிறோம்**
**கண்ணிருக்க மணியில்லை – காத்திருக்க**
**உயிரில்லை இங்கே உறவிருக்க நீர் அருகில்லை**
**உம் நினைவோடு நாமும் வாழ்வோமே.**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மீசாலை கிழக்கு,
மீசாலை

செல்லக்கண்டு அக்கா குடும்பம்
[illegible]
[illegible]

---

# கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| * 24 * 01 * 1947 | | * 03 * 08 * 2016 |



*அமரர்*
# கந்தையா இரட்ணம்

விழிகள் இமைக்க மறுக்கின்றதே
விதிதான் உம்மை அழைத்த செய்தி கேட்டு
உதயமாய் ஒளியாய் விண்ணில் திகழ்ந்தவனே!
உலகினை விடுத்து சென்றதேனோ
அறியா உமது அன்பதனை
அவனியில் இனியாம் பெற முடியாதென்பதோ.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வம் குடும்பம்
தாவளை இயற்றாலை.
வரணி.

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
1947 . 01 . 24



காலன் பிடியில்
2016 . 08 . 03

## அமரர் கந்தையா இரட்ணம்

பூத்தமலர் பொழுதுசாய முன் வாடிவிடும்
காய்த்த கனி பழுமாகி நிலத்தில் விழும்
காலமென்ற சுழல் காற்றில் கலையாத
பொருள்கள் உண்டோ ?

காரணங்கள் பலசொல்லி
கவலைகளை அணைத்திட
ஐயா உந்தன் பிரிவு
சாதாரண பிரிவல்ல
எம்மால் ஏற்றுக்கொள்ள
முடியாத பிரிவொன்றே...

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயருடன் :
மகேந்திரராசா (ஜெயம்)
குடும்பத்தினர்

04.08.2016

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
* 24 * 01 * 1947



விண்ணில்
* 03 * 08 * 2016

அமரர்

## கந்தையா இரட்ணம்

அன்பின் உருவே!
அணையா ஒளிவிளக்கே!
நீ மறைந்த செய்தி
காற்றினிலே கலந்து வர - இது
பொய்யாகாதோ என - எம்
மனம் ஏங்கி நிற்கின்றது.
ஐயகோ என் செய்வோம் - உன்
அவசர பயணமதை..........
ஆண்டவன் அடி சேர்ந்து
அமைதி அடைக உன் ஆத்மா

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தம்பு குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிநீர் சொரிகின்றோம்

எங்கள் ஆருயிர் நண்பன் இரட்ணம் ரமேஸ் அவர்களின் அன்புத்தந்தையார்

| பிறப்பு : | இறப்பு : |
|---|---|
| 1947 . 01 . 24 | 2016 . 08 . 03 |



அமரர்

### கந்தையா இரட்ணம்

(படப்பிடிப்பு ஊடகவியலாளர்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பல கடந்து சென்றாலும்
கொண்ட கோலங்கள் நிலை மாறிப்போனாலும்
காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்
பிறப்போடு இறப்பு இணைந்தது
எனினும் உங்கள் இழப்பை ஏனோ
நெஞ்சம் ஏற்க மறுக்கிறதே .....

அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்

04.08.2016

ஊர் விழிகளுடன்
கச்சேரியடி நண்பர்கள்

மோனா பதிப்பகம், கச்சேரியடி 021 221 7939

## நீங்காத நினைவலைகளுடன்...

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 . 01 . 1947 | 03 . 08 . 2016 |



எமது நிறுவனத்தின் ஊழியரான திரு ரமேஸ் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர். கந்தையா இரத்தினம்

மறைந்தவர்கள் எல்லோரும் மண்ணாவதில்லை!
மாறாக......
மறைந்தும் மறையாத சூரியனாய்
எம் மனதில் என்றும்
அழியாது வாழ்பவர்கள் சிலர் உள்ளார்.....
அவர் வரிசையில் சிலையானீர்.
உமக்காய் தலை வணங்குகிறோம்!
இறைவனின் அன்பினை அனுபவிக்க
எண்ணினீர்களோ?
சிறந்தோரும் அன்போடும்
நடத்திய அழகான உங்கள் உறவுகளை
அழவைத்து விட்டு ஆண்டவனை
அடைய என்ன அவசரமோ?......

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

04.08.2016

உரிமையாளரும், ஊழியர்களும்
கஜமுகன் ஹார்ட்வெயார்
147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



பிறப்பு: 24. 01. 1947 இறப்பு: 03. 08. 2016

அமரர்

## கந்தையா இரத்தினம்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
இலங்கை வங்கி
ஸ்ரான்லி வீதி
நண்பர்கள்

# கண்ணீர் அஞ்சலிகள்

மண்மகிழ 24 ● 01 ● 1947



கண்நெகிழ 03 ● 08 ● 2016

## அமரர் கந்தையா ரட்ணம்

அவர்கள்

அர்த்தமுள்ள வாழ்க்கையின்
அழியாத அடிச்சுவடாய
அவனியிலே வாழ்ந்துவிட்டவரே!
உமை நினைத்து நீர்சொன்ன வார்த்தைகள்
எம் நெஞ்சில் நிதம் நிழலாட
நாம் உமக்கு எமது கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி !!! சாந்தி !! சாந்தி !

செல்லக்கண்டு குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 24 . 01 . 1947

இறப்பு 03 . 08 . 2016

## கந்தையா ரட்ணம்

(ஒளிப்பட ஊடகவியலாளர்)

உதயன் குழுமத் தலைவர் மற்றும் பணியாளர்கள்.



# கண்ணீர் அஞ்சலி

## அமரர் கந்தையா இரத்தினம்

எமது நிறுவனத்தின்
ஊழியரான இ.ரமேஷின் அன்புத் தந்தை
கந்தையா இரத்தினம் அவர்களின்
திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த
துயர் அடைவதுடன்
அன்னாரின்
குடும்பத்தினருக்கு
அனுதாபங்களைத்
தெரிவித்து
கொள்வதுடன்
அவரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
சுஜமுகன் ஹாட்வெயார்
147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[C-5364]

# ஏங்கே?

உன்னுடனே வாழ்ந் திட்ட
உயர் தரும நெறி யெங்கே?
கன்னலென அமு தீந்த
கனிந்திட்ட வாழ் வெங்கே?
துன்பமெலாம் துடைத் தழித்த
தூய எழிற் சிரிப் பெங்கே?
அன்பதனால் அர வணைத்த
ஆணழகே நீ யெங்கே?

*- துணைவி*

## நன்றி

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணங் பெரிது"

அன்பிற்கோர் அணிகலனாய் பண்பிற்கோர் இலக்கணமாய் செயற்திறனுக் கோர் வித்தகனாய். விருந்தோம்பலில் ஒப்பற்றவனாய் வாழ்ந்த எம் குடும்பத் தலைவன் கந்தையா இரத்தினம் விண்ணுலகம் உற்றமை கேட்டறிந்து அத்துயரில் பங்கு கொண்டு அனுதாபம். ஆறுதல். வழாங்கிய அன்பர். உற்றார். உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் இரங்கல் செய்தி அனுப்பிய அனுதாபிகளுக்கும் இரங்கல் அஞ்சலி வெளியிட்ட அன்பு நெஞ்சங்களுக்கும் மற்றும் இறுதிச்சடங்கு. தகனக்கிரியைகளில் இணைந்து கொண்டோர்க்கும் இம்மலரினை சிறந்த முறையில் பதிந்தளித்த d'signarts நிறுவனத்தினருக்கும் இன்று நிகழும் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் உங்களுக்கும் எங்கள் உள்ளம் மறவா நன்றிகள் உரித்தாகும்.

கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
16.09.2016

அன்புடன்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ

அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையதை எதை நீ இழந்தாய்?

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது

எதைக் கொடுத்தாயோ

அது இங்கேயே கொடுக்கப்பட்டது

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவருடையதாகிறது

மற்றொரு நாள் வேறொருவருடையதாகும்

இதுவே உலக நியதியும்

எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

— பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org